S.C. No: 31/2022

பெயர் : முருகதாஸ்

**அ.சா.10**

12-02-2025

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்த செய்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரை எழுதியது போலிசார் யார் என்று தெரியாது . நான் கையெழுத்து செய்த போது என்னை தவிர பழனிசாமி, சந்தானமௌலீஸ்வரன் இருந்தார்கள். இறந்து போனவர் என்னுடைய தெரு தான் . இந்த இரண்டு கையெழுத்துகளையுமே போலிசார் கேட்டதால் போட்டு கொடுத்தேன் என்றால் ஆமாம். நான்சொன்ன நாள் நேரத்தில் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் , போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, சம்பவயிடத்தில் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் : சந்தானமௌலீஸ்வரன்

**அ.சா. 9**

12-02-2025

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்கு விசாரணை**

நான் 6 ஆம் வகுப்புவரை படித்திருக்கிறேன். 2006 இல் இருந்து டிரைவராக திருநாகேஸ்வரம் லாரி செட்டில் வேலை பார்க்கிறேன். இறந்து போன ராஜேந்திரன் எனக்கு எதிர் வீடு. சொந்தகாரங்க கிடையாது. அவர் இறந்து போன அன்று நான் காவல் நிலையம் போகவில்லை. காலை 6 மணிக்கு அவர் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டு, அவர் காளவாயிக்கு தான் நான் போனேன் . காளவாயிக்கு அடுத்த வயலில் ஒரு வீடு உள்ளது என்றால் ஆமாம் . அதற்கு அடுத்தாற்போல் தொடர்ச்சியாக வீடு உள்ளது. அவர் இறந்து போனதாக சொல்லப்படும் இடத்திற்கு 100 மீ தூரத்தில் அரசு மதுபான கடை உள்ளது என்றால் ஆமாம் . திருநாகேஸ்வரத்தில் இருந்து அவர் இறந்து போன இடத்திற்கு வரவேண்டும் என்றால் ஒரே ஒரு மண் பாதை தான் உள்ளது என்றால் ஆமாம் . மொத்தம் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் அந்தயிடத்தில் படம் வரைந்து எழுதிக்கொண்டதில் ஒரு கையெழுத்தும் , பிளட் சாம்பிள் எடுத்ததற்காக ஒரு கையெழுத்தும் போட்டேன். இந்த இரண்டு கையெழுத்து தவிர வேறு எந்த கையெழுத்தும் போடவில்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணத்தை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது . நான் கையெழுத்து போட்ட இடத்தில் போலிசாரையும் என்னையும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் நிறைய பொதுமக்கள் இருந்தார்கள். அங்கே நிறை பொதுமக்கள் இருந்தார்கள் . பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ராஜேந்திரன் இறந்துவிட்டார் என்று எனக்கு தகவல் யார் சொன்னார்கள் என்றால் அவர் எதிர்த்த வீடு என்பதால் , இறந்துவிட்டார் என்ற தகவல் தெரிந்து, என் மனைவி என்னை எழுப்பி சொன்னார் . நான் அவர் இறந்து போன அந்த வயலுக்கு நான் காலை 6 மணிக்கு போனேன். நான் அங்கு போன

பிறகு தான் அதிகாரிகள் எல்லாம் வந்தார்கள் . போலிஸ் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று என்னால் சரியாக சொல்ல தெரியவில்லை. நான் போய் 1/2 மணி நேரத்திற்குள் போலிசார் வந்துவிட்டார்கள். போலிசார் பிளட் சேம்பிளை தரையில் இருந்து எடுத்தார்கள். அவர் இறந்து கிடந்த இடத்தில் இருந்து எடுத்தார்கள் . ராஜேந்திரன் வயலுக்கு பக்கத்து வயல்காரர்களும் இருந்தார்கள் . ஊர்காரர்களும் இருந்தார்கள். என்னை தவிர முருகதாஸை தவிர வேறு யாரை போலிசார் விசாரித்தார்கள் என்று தெரியாது. நான் சம்பவயிடத்தில் இருந்த போது, சுமாராக 50 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் ஆமாம் . எத்தனை பாக்கெட் எடுத்தார்கள் என்றால் 2 பாக்கெட் எடுத்தார்கள். இரண்டுமே ரத்தம் படிந்த மண்ணா என்றால் ஒன்று ரத்தம் படிந்த மண் , ஒன்று ரத்தம் படியாத மண் . நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவயிடத்திற்கே போகவில்லை என்றாலும், இறந்தவர் எனக்கு எதிர்த்த வீட்டுகாரர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . சம்பவயிடத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் : சங்கர்

**அ.சா. 8**

12-02-2025

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்கு விசாரணை**

2020, 8 மாதத்தில் இருந்து 2021 7 வது மாதம் வரை நான் திருநாகேஸ்வரம் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றினேன். புல எண் 255, வெள்ளைக்கரை புறம்போக்கு என்பது அரசுக்கு சொந்தமானது என்றால் சரி . ராஜேந்திரன் பெயரில் நான் அனுபவ சான்று வழங்கியுள்ளேன். அதற்கு முன்பு ஏதாவது ஆவணம் அவர் பெயரில் உள்ளதா என்றால் தெரியாது. எனக்கு தனியாக பணி பதிவேடு உள்ளது . மற்றும் என் கிராம வருவாய்க்கு உட்பட்ட நிலங்கள் யார் யாருடைய பெயரில் உள்ளது. யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை A Register மற்றும் B Register பதிவுகளை பார்த்தால் தெரியும் என்றால் ஆமாம் . அவ்வாறு பதிவேட்டை பார்த்தால் தான் யார் அனுபவத்தில் உள்ளது என்பதை சொல்லமுடியும் என்றால் ஆமாம். அந்த பதிவேடுகளுன் நகல்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பதிவேடுகளை பார்த்து தான் சான்று வழங்க முடியும் என்றால் பதிவேடுகளை பார்த்தும் , உள்ளூரில் அக்கம்பக்கத்தில் விசாரித்து வழங்குவோம் . தற்போது அனுபவ சான்று வழங்குவதில்லை . அ.சா.ஆ.5 சான்று ஆவணங்களின் படி கொடுக்கவில்லை. என் விசாரணையின் படி கொடுத்தேன் . இவ்வாறு நான் சான்று வழங்கியதற்கு என் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் எனக்கு தெரியாது. அரசுக்கு சொந்தமான நிலங்களில் யாராவது சாகுபடி செய்தால், பி-மெமோ அபராதம் வழங்குவோம். பி-மெமோ என்பது அபராத சான்று தான். அனுபவ சான்று கிடையாது. பி.சா.ஆ.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள் சம்மந்தப்பட்ட பதிவேடுகள் எதுவும் நான் கொண்டுவரவில்லை . அது யாருக்கு சொந்தமென்று தற்போது என்னால் சொல்ல இயலாது . குற்ற எண் வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் போலிசார் கேட்டுக்கொண்டதால் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். இந்த அனுபவ சான்று கொடுப்பதற்கு வட்டாட்சியரிடம் அனுமதி வாங்கவில்லை. நான் அலுவல் ரீதியாக காவல் நிலையம் செல்ல வேண்டும் என்றால் வட்டாட்சியரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் ஆமாம் .

அ.சா.ஆ.5 இல் சொல்லப்பட்டுள்ள புல எண்கள் கொலையுண்டு இறந்து போனவருக்கோ, அவருடைய குடும்பத்தினருக்கோ சொந்தம் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. புல எண் 255/2 என்பது மைனர் வரதராஜன் என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் அ- பதிவேட்டை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். 199/1 ஏ, 1 பி என்பது சுதா, தங்கராசு என்பவருக்கு சொந்தமானது என்றால் கிராம கணக்கை பார்த்தால் தான் சொல்ல முடியும். மூன்று புல எண்களும் இறந்து போனவருக்கு சொந்தமானது கிடையாது என்றாலும் நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் இந்த கிராம கணக்கை வழங்கியுள்ளேன் என்றால் கிராம கணக்கை பார்த்தால் தான் சொல்ல முடியும் . ஒப்புதல் வாக்குமூலத்தில் சன்னாபுரம் கிரமா நிர்வாக அலுவலர் தியாகராஜனும், சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று தான் உள்ளது என்றால் ஆமாம் . நாங்கள் எதிரி சொன்னதை டிராப்டாக எழுதிக்கொண்டு போனோம் . அதை பார்த்து ஸடேசனில் எழுதி எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் . டிராப்டை போலிசாரிடம் கொடுக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும், கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையெழுத்தும் ஒரே கையெழுத்து தான் . அதை எழுதியவரின் பெயர் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து எழுதும் போது என்ன மணி இருக்கும் என்றால் மாலை நேரம். சரியாக ஞாபகமில்லை. நான் கையெழுத்து போடும் போது 4, 5 பேர் இருந்தார்கள். நானும் தியாகராஜனும் ஒன்றாக தான் போனோம். நான், போலிசாரை தவிர வேறு யாரும் காவல் நிலையத்தில் இல்லை என்றால் ஆமாம் . அனுபவ சான்று எந்த தேதியில் யாரிடம் எப்பொழுது கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை . என்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட அணைக்குடி கிராமம் வேறு , சன்னாபுரம் கிராமம் வேறு என்றால் ஆமாம் . சன்னாபுரம் கிராமத்திற்குட்பட்ட புல எண்ணிற்கு நான் அனுபவ சான்று வழங்க முடியாது என்றால் ஆமாம். நான் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . என்னுடைய அதிகாரத்திற்குட்படாத கிராமத்திற்கு நான் அனுபவ சான்று வழங்கியது சட்டப்படி தப்பு என்றால் சரியல்ல . நான் விசாரணை செய்திருந்தால் கூட ஆவணங்களின் அடிப்படையில் தான் சான்று வழங்கப்பட வேண்டும் என்றாலும் அவ்வாறு ஆவணங்களை பரிசீலிக்காமல் சன்னாபுரம் கிராமத்திற்குட்பட்ட இடத்திற்கு சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது வரை அந்த சர்வே எண் யாருடைய அனுபவத்தில் இருந்து

வருகிறது என்பதை அந்த வருவாய் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும் என்றால் சரி.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.